செய்தி வெளியீடு எண். 57-2017 நாள்: 21.10.2017

# விழுப்புரம் மாவட்டத்தில் உரம் பூச்சிகொல்லி விதைகள் விற்பனை செய்யும் உர வியாபாரிகள் அரசு உரிமம் பெறாமல் விற்பனை செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் எச்சரித்துள்ளார்.

*****

விழுப்புரம் மாவட்டம், தமிழகத்தின் மொத்த உணவு உற்பத்தியில் 10 சதவீதத்திற்கு மேல் தனது பங்கினை கொடுத்து வருகிறது. உணவு உற்பத்திக்கு மிகவும் முக்கியமானது விதை, உரம், பூச்சிகொல்லி மற்றும் இதர இடுபொருட்கள். நமது மாவட்டத்தில் விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிகொல்லி விற்பனையாளர்கள் அரசு உரிமம் பெற்று விற்பனை செய்து வருகின்றனர். உரிமம் பெறாமல் விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். விற்பனையாளர்கள் தரமான பொருட்களை விற்பதுடன் உரம், பூச்சி மருந்துகள், விதைகள் இருப்பு விபரம் மற்றும் அதற்கான விலைப்புள்ளி விவரங்களை கண்டிப்பாக தகவல் பலகையில் தினந்தோறும் தெரிவிக்க வேண்டும். விவசாயிகள் பெறும் இடுபொருட்களுக்கு விற்பனையாளர்கள் கண்டிப்பாக ரசீது கொடுக்க வேண்டும். தரமான இடுபொருட்களை விற்பனை செய்வது மட்டுமல்லாது தரமற்ற காலாவதியான இடுபொருட்களை விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். அவ்வாறு விற்பவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாய பெருமக்கள் கடைகளில் தாங்கள் வாங்கும் உரம், பூச்சிமருந்து மற்றும் விதைகள் போன்றவற்றிற்கு சரியான விலைகொடுத்து வாங்கும் பொருட்களுக்கு ரசீது கேட்டு பெற்றுக் கொள்ளவும். விவசாயிகள் வாங்கும் பொருட்கள் காலாவதியாகாமல் உள்ளதா என்பதையும் சரிபார்த்து பெற்றுக் கொள்ளவும். விதைகளை பொருத்த மட்டில் தமிழக அரசால் சான்று பெற்ற விதைகளை கேட்டு வாங்கவும். தரமான இடுபொருட்களை பெற்று மாவட்டத்தின் உணவு உற்பத்தியினை பெருக்கிட, விவசாய பெருமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவசாயிகள் உரம், விதைகள், பூச்சிமருந்து சம்மந்தமான புகார்கள் ஏதேனும் இருப்பின் தகவல் தெரிவிக்க விரும்பினால் வேளாண்மை இணை இயக்குநர், விழுப்புரம் அவர்களின் அலுவலக தொலைபேசி எண்.04146-222291 மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) விழுப்புரம் அலுவலக தொலைபேசி எண்.04146-223268 ஆகியவற்றை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.